"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
30 JUN 1910

பூலோக வியாஸன்.

மாதாந்தரப் பிரசுரம்.

தொகுதி 6.] சென்னை, 1909ஆம் மார்ச்சு மீ [பகுதி 3.

ராஸிலஸ்.

ஆங்கில மொழிபெயர்ப்பு.

7-ஆம் பக்கத்தொடர்ச்சி.

மறு நாள் வார்த்திகராகிய வித்தியாகுரு ராஜகுமாரனுடைய மனோவியாதிக்கூறு தமக்கு மயக்கமறத் தெரிந்ததாகப் பாவித்து, புத்தி புகட்டி அப்பிணியைத் தீர்க்க நினைந்து அவனைத் தரிசித்து வார்த்தையாடும்படி காத்து இங்கிதம் பேசிச்சமயம் பார்த்திருந்தார். அவர் அறிந்தவையெல்லாம் தனக்குக் கற்பித்தாயினவென்று இளவரசன் மதிப்பிட்டிருந்தினால் குருவைத் தன் அண்டையிற்சேர்க்க முக்கியமாய் விரும்பவில்லை. இவர் ஏன் இப்படி வலிய நுழையவருகிறார்? கல்வி நூதனமாயிருக்கும்பொழுதே எனக்கு இன்பமாயிருந்தது. கற்றறிந்த கல்வியை மறந்தாலல்லவா அது மீளவும் நூதனமாகும். அதைமறக்க இவர் என்னை ஒருபொழுதும்விடாரா என மொழிந்து, அவன் வனத்திற் புகுந்து வழக்கப்படி சிந்தனைசெய்ய உட்கார்ந்தான். அவன் நெஞ்சில் சிந்தனை உண்டாக்கி ஒரு துறையிற் செல்லுமுன் தொடர்ந்த குருவை அண்டையிற் கண்டு சற்றுப் பதைத்து அவ்விடத்தினின்று விரைந்து விலக முதலில் எண்ணமிட்டான், அந்தக் குருவோ சாமானியரல்ல, முன்பு அவனால் சம்மானிக்கப்பட்டவர்; அன்றளவும் அவன் உள்ளன்பைக் கொள்ளைகொண்டவர். ஆனதுபற்றி, அவருக்கு அபகாரம் செய்ய அவன் மனம் ஒப்பவில்லை. தன்னோடு ஏரிக்கரையில் உட்காரச் சொன்னான்.

'கொஞ்ச இடம் தந்தால் மிஞ்ச இடம் தேடிக்கொள்வான்' என்னும் பழமொழிப்படி, அந்த முதியவர் உட்கார இடம் பெறவும், சமீபகாலத்தில் சக்ரவர்த்தி புத்திரனுடைய குணம் மாறியதைப்பற்றிப் பிரலாபித்து

"நீர் அரண்மனையில் நாளொருவண்ணம் நடக்கும் இன்ப காலட்சேபங்களை வெறுத்துத் தள்ளி, இவ்விடத்திற்கு அடிக்கடி தனித்து வந்து மௌனம் சாதிப்பதேன்?" என வினவினார், அதற்கு ராஸிலஸ் "இன்பபோகம் முன்போல எனக்கு இனிதாயிருக்கவில்லை- ஆனதுகொண்டு போகத்தைப் போக்கடித்துவிட்டுப் போகிறேன் மனத்துயர் தீரத்தனித்திருக்க நாடுகிறேன். பிறரோடு கலந்து அவர்சுகத்திற்கு இடர்செய்வது எனக்கு இதமல்ல என்றான், அதுகேட்டு, ஆசிரியர் "இன்பத்திற்கு இருப்பிடமாகிய இந்தப்பள்ளத்தாக்கில் துன்பப்படுவதாக என் செவிப்பட முதலிற்குறைகூறச் சிறிதும் ஏது இல்லையென்று உமக்கு உள்ளுற உணர்த்த வாஞ்சித்திருக்கிறேன் அபிஸினிய சக்ரவர்த்திக்கு உள்ள வைபவங்கள் எல்லாம் குறையாமல் உமது ஸ்வாதீனத்தில் இருக்கின்றன. இங்குமங்குப் படுவதற்குப் பாடும் இல்லை. அஞ்சுவதற்கு அபாயமும் இல்லை. இல்லாதிருந்தும் பாட்டினாலும் அபாயத்தினாலும் விளையும் பயன் அனைத்தும் இங்குண்டு- நாற்றிசையும் பார்த்துச் சொல்லும்- உமக்கு இங்கேதிராதிருக்கின்ற குறை என்ன? குறை ஒன்றும் இல்லாதிருந்தால், மனக்குறை உண்டாவதேன்?" என்று கேட்டார்.

இப்படி ஆசிரியர் கேட்ட கேள்விக்கு ராஸிலஸ் பகர்ந்த மறுமொழி இது:—"குறை ஒன்றும் எனக்கு இல்லாதிருப்பதும், இருந்தால் அதுஇன்னதென்று அறியாதிருப்பதுமே என் மனக்குறைக்கு நிமித்தமாம். நெஞ்சறிய எனக்கு ஏதும் குறை இருந்தால், அதைத் தீர்க்க ஆசைஉண்டாகும் அவ்வாசை முயற்சியைத்தரும்- முயற்சிபிறந்தால், ஆதித்தன் அஸ்தகிரிசேர நெடும்பொழுது செல்கின்றதேயென்று என் மனம் பதைக்காதே; நித்திரை ஒழிந்து அறிவு தெளிந்த பொழுது விடியவும் நான் பிரலபிக்க நிமித்தம் இராதே. வெள்ளாட்டுக்குட்டி செம்மறியாட்டுக்குட்டிகள் ஒன்றையொன்றுதொடர்ந்து ஒடுவதைப்பார்க்கும்பொழுது, அவ்வாறுதொடர எனக்கும் யாதாயினும் விஷயம் இருக்குமானால், ஆனந்தம் உண்டாகுமேயென்று என் இதயம் நினைக்கின்றது, வேண்டுவன யாவும் குறையாதிருப்பதனால், யாதொரு விகற்பமின்றி, நேற்றையதினம் அச்சம் இன்றையதினம்போலும், சென்ற நாழிகை செல்லுகின்ற நாழிகைபோலும் இருக்கின்றன, பின்னும் சொல்லில், எனக்கு ஒரு நாள் அல்ல ஒரு நாழிகை ஒரு வருஷம்போல நீடித்து நிற்கின்றது. என் சிறுபருவத்தில் ஒருநாள் ஒருநாழிகைபோலக் குறுகி விரைவிற்கழிந்தது. பிரபஞ்சப் பரப்பு விநோதமாகத் தோன்றியது. நிமிஷத்திற்கு நிமிஷம் முன் காணாத நூதனங்களைக் கண்டேன். நாள் என்பதை அவ்வண்ணம் குறுகத்தோற்றுவிக்கும் உபாயம் ஏதும் அறிந்தால் சொல்லும். எனக்கு இப்பொழுதே போகம் தெவிட்டுகின்றது. விரும்பத்தகும் நூதனவிஷயம் ஏதும் காட்டும்." புதிதாய் விளைந்த இவ்வகைத் துயரைக்கண்டு அந்த வயோதிகருக்குப் பிர

மை உண்டாயிற்று- ராஸிலஸ் கேட்ட கேள்விக்கு ஏற்கும் உத்தரம் இன்னதென்று அவர் அறியவில்லை. மௌனமாயிருக்கவும் அவர் மனம் ஒப்பவில்லை. "துரையே, விஸ்தாரமான இவ்வையகத்தில் விளையும் துன்பம் துயரைக் கண்டறிந்திருப்பீரானால், உமது தற்கால நிலையின் அருமை பெருமையை அறிவீர்" எனப் பண்டிதர் சொல்ல, ராஜகுமாரன் "ஆஹா, விரும்பித் தொடர விஷயம் ஒன்று காட்டினீர். துன்பம் இன்றி இன்பம் இல்லை. ஆதலால் இனி இவ்வுலகில் உள்ள துன்பம் துயரைக் காணும் பேரவா எனக்கு உண்டாகின்றது" என்றான்.

அவ்வேளையில் சிற்றுண்டி கொள்ளக் காலம்கிட்டியதெனக் கீதவாத்திய ஓசையால் தெரியவந்தது. ஆனதுபற்றி, அம்மட்டிற் சம்வாதத்தை நிறுத்திவிட்டார்கள். தாம் நியாயம்சொல்லித் தவிர்க்கக் கருதிய சித்தாந்தமே அறுதியில் உறுதிபட்டதெனக் கண்டு, அந்த வயோதிகர் மெத்தவும் சலிப்புற்றுப் போய்விட்டார். வெகுகாலம் எடுத்து எடுத்து வழக்கப்பட்ட சுமையை மனுஷர் எளிதில் எடுத்துக்கொண்டுபோவார்கள். தம்மை அவமதிசெய்யும் இளையோரை மூதியோரும் அவமதி செய்வார்கள். மரணதூதன் கரத்தால் ஒழிவிக்க எத்தனிக்கும் உபத்திரவத்தை மனுஷர் பாராட்டுகிறதில்லை. ஆகவே, பருவம் சாய்ந்தவர்களுக்கு வெட்கமும் துக்கமும் நீடித்து நில்லா.

மனக்கருத்தை அகலச் செலுத்திப் பார்த்து வழக்கப்பட்ட சக்ரவர்த்தி புத்திரனுக்கு உண்டான மனோவிகாரம் விரைவில் தணியவில்லை. நாள் ஏற இருப்பவர்கள் சுமந்து தீர்க்கவேண்டிய பாரம் மிகுதியென்று முன்பு அவன் சிந்தையிற் பட்டது. ஆனதுபற்றி, வாலிபனாகிய தனக்கு இவ்வுலகில் அல்லலும் அலைச்சலும் தீர வெகு காலம் செல்லுமென்று எண்ணி அவன் இதயம் பகீரிட்டது. காலம் நீடித்தாற் செய்தொழில் பெருகுமென்று இப்பொழுது கண்டறிந்து, தான் பாலியனாயிருப்பதை எண்ணி மனம் மகிழ்ந்தான். ஆசை என்னும் சூரிய விம்பத்தினின்று ஒரு கதிர் அவன் உள்ளத்தை உருவச் செல்லவும், இளமைபெயர்ந்து முகம் மலர்ந்து, அவன் விழி இரண்டும் ஒளி இரட்டித்தன. யாதாயினும் ஒரு கருமத்தைச் செய்யும் ஆசை என்னும் நெருப்பு அவன் இதயத்தில் மூண்டது. அதைச் செய்து விளையும் பயனும், செய்ய உதவும் சாதனமும் அவனுக்குத் தெளியத்தெரியவில்லை. அன்று தொடங்கி ஒரு நாளும் அவன் குறுவிசாரப்ப

டவுமில்லை, மனுஷரோடு கலந்து அளவளாவாதிருக்கவுமில்லை. ஒளித்துவைத்தன்றி அனுபவிக்கக்கூடாத இன்பம் என்னும் சர்க்கு எவரும் அறியாமல் தன் கையிருப்பாயுள்ளதை எண்ணி, எவ்வகை வினோதத்துறையிலும் இறங்கியவன்போல நடித்து, தனக்கு அலுப்பு உண்டாக்கிய நிலையிற் பிறர்க்கு இதம் உண்டாக்கப் பதைத்தான். ஆனாலும், ஒன்று வாஸ்தவம். இன்பம் எவ்வளவு பெருகினும், இடையறாது நீடிப்பினும், மனுஷர் வாழ்நாளின் அதிக பாகம் செயலொழிந்து வியர்த்தமாய்க் கழியுமேதவிர மற்றப்படியல்ல. எவரும் அறியாமல் தன்னந்தனியே இருந்து யோகாப்பியாசம் செய்ய ஒழிந்த நாழிகை அவனுக்கு இராப்பகல் இருபொழுதும் மிகவும் உண்டு. அந்தப் பள்ளத்தாக்கில் இருப்பது முன் அவனுக்குத் தாங்க அரிய பாரமாகத் தோன்றிற்று. பின்னிட்டு அந்தப்பாரம் மிகவும்லேசாயிற்று. அடிக்கடி ஜனசங்கத்திற் கலப்பது தன் தாற்பரிய சித்திக்கு ஆவசியகமென்று எண்ணி அவன் ஆவலுடன் செல்வான். சிந்திக்க விஷயம் இருந்ததனால், ஜனசங்கத்தினின்று சந்துஷ்டியாய் விலகித்தனித்திருப்பான். முன் எப்பொழுதும் கண்டிராத இவ்வுலகப் பரப்பைப் படத்திற் சித்திரித்திருக்குமாப்போலக்கருத்தினாற் கண்டு, வெவ்வேறு நிலைகளில் தன்னை நாட்டி இல்லாத இன்னல் இடைஞ்சல் அல்லல் அவதிகளைக் கற்பித்து அவைகளில் சிக்குண்டு, வம்பாய் முடியும் சண்டைகள் தொடங்கியதாக மனோபாவனை செய்வதே அவனுக்கு முக்கிய காலக்ஷேபமாயிருந்தது. பரோபகாரசிந்தை அவனுக்கு ஜன்மப்பிரகிர்த்தி. ஆதலால், இடர் தீர்ப்பது-கள்ளம் கபடம் சூது கண்டு வெளியிடுவது-நிஷ்டூரம் செய்வாரைத் தலைப்படவிடாமல் மடக்குவது-சுகத்தைப் பெருக்குவது முதலிய சத்கிரியைகளில் அவன் சிந்தனை சென்றது.

ராஸில்ஸின் வாழ்நாளில் இருபது மாசகாலம் இவ்வாறு கழிந்தது. மனோரதமான ஆதாளியில் அவன் மனம் அழுந்தப் பிரவர்த்தித்திருந்ததனால், ஏகாந்தவாழ்வின் மர்மத்தை மறந்திட்டான். உலகத்தில் மனுஷருக்கு அவரவர் நிலையில் நேரிடும் பற்பல நிகழ்ச்சிகளுக்கு வேண்டும் எத்தனங்களை நாழிகைதோறும் சிந்தித்து, ஜனசங்கத்திற் கலந்து உறவாடுமுறைகள் எவையென்று சிந்தையிற் கொள்ளாது விட்டான்.

ஒரு நாள் நதிதீரத்தில் உட்கார்ந்திருக்கையில், நண்பனென்று இதம் சொல்லிச் சதி நினைந்த ஒருவன் தந்தை தாய் தமர் இல்லாத கன்னிப்பருவப் பெண்ணொருத்திக்கு உள்ள அற்ப சொத்தைக் கொள்ளையிட்டுக்கொண்டு ஓட, அப்பெண்பேதை தன் சொத்தைக் கொடுத்துவிடும்படி அழுதழுது கேட்டு அவனைத் தொடர்வதாக ராவிலஸ் மனோபாவனை செய்தான். இந்தப்பாவனை அவன் நெஞ்சில் முத்திரித்தாற்போல் அழுந்தியிருந்ததனால் அந்த அனாதகன்னியைத் துணைநின்று ரக்ஷிக்க நினைந்து குதித்தெழுந்து, அவன் கண்ணுக்கு எதிரிற் கண்டு காதலித்துத் தொடர்வதுபோல, கள்வனைப் பிடிக்கக் கருதி விரைந்தோடினான். தோஷத்தின் கதிக்கு அச்சத்தால் தீவிரம் உண்டாவது இயற்கை. ஓடின கள்வனை ராவிலஸ் மூச்சு அடக்கிப் பறந்து தொடர்ந்தும், அகப்படுத்தமுடியவில்லை. விரைந்து ஓடி அகப்படுத்த முடியாதிருந்தும்விடாது ஓடிக் களைக்கப்பண்ண நிர்ணயித்து மலையடி வாரங்கிட்டுமளவும் ராவிலஸ் அவனைச் சலிப்பற்றுத் தொடர்ந்தான் அப்பால் ஓட வழி இல்லையே.

(இன்னும் வரும்)

அத்துவித சித்தாந்தம்.

5-ஆம் பக்கத் தொடர்ச்சி

சைவமத சித்தாந்திகள் சொல்வதுபோல ஜீவான்மாக்களும் பரிபூரணம் ஆன்மசிவ பிரமப் பொருளும் பரிபூரணமாகட்டுமே யென்னின் அவ்வாறு கூறினால் சுருதிமுதலிய கலைகளுக்கும் விரோதம், யுக்தி யனுபவங்கட்கும் பொருந்தாது ஆன்மசிவப்பிரமம் பூரணமென்பது மதசித்தாந்திகட்கும் வேதாந்திகட்கும் உடம்பாடே. மற்றப்படி யொவ்வொரு ஜீவான்மாக்களும் தனித்தனிப் பூரணமென்பது மதசிந்தாந்திகட்கு மாத்திரம் உடம்பாடாகும் ஷை இரண்டையும் பூரணமாய்ச் சொல்லுமிடத்து ஆன்மசிவ பிரமப்பொருள் சத்தாயிருப்பது போல் ஜீவான்மாக்களும் சத்துப்பொருளாமா! ஒரு பரிபூரணசத்துப் பொருளின்கண் மற்றொரு பரிபூரணசத்துப் பொருளிருத்தல்

எங்ஙனம் கூடும் ஒரு பரிபூரண சத்துப்பொருளின் கண் பிறிதொரு சத்துப்பொருளை யிருத்தல் அன்மையதாகப் பல்லாயிரங்கோடி பரிபூரணசத்துப் பொருள்களிருத்தல் என்பது ஒவ்வுமா? ஜீவான்மாக்களை அபரிபூரண சத்துப்பொரு ளென்றாலும் அமையாதே ஒருபரிபூரண சத்துப் பொருளினிடத்து ஏகதேசமான ஒரு அணுசத்துப் பொருளிருத்தல் என்பதும் அசம்பவமாக பலகோடி அணுசத்துப்பொருள் இருக்குமென்கை வாய்ச்சொல்லேயன்றிப் பிறிதில்லை. பலகோடி அணுசத்துப்பொருளை யிருத்தல் கூடாதென்னின் பலகோடி பரிபூரண சத்துப் பொருளிருக்கு மென்றுரைத்தலை யெங்ஙனம் அங்கீகரிக்க லாகும்? ஆன்மசிவப் பிரமம் பரிபூரணமென்றும் சத்தென்றும் வேதாந்திகளும் மதசித்தாந்திகளும் ஒத்துக்கொள்ளுகிறார்க ளென்பது உண்மை ஜீவான்மா விஷயத்தில் இருவரும் வேறுபடுகிறார்கள் ஜீவர்களை அணுவென்றும் சொப்பனத்தைப் போலச் சத்துப் போலியென்றும் சொல்லுகிறார்கள் வேதாந்திகள் மதசித்தாந்திகளோ, சிவனென்றும் பிரமமென்றும் ஆன்மா வென்றும் சொல்லப்பட்ட பரிபூரணப் பொருளுக்கு மேற்படி பெயர்களில் சிவன் பிரமமென்னும் இரண்டு பெயர்களைத் தள்ளி, ஆன்மா வென்னும் பெயரைமாத்திரம் எடுத்துக்கொண்டு, அப்பெயரையுடைய பொருள் ஜீவான்மா வென்றும், அதற்குப் பிரமமான சிவன் வேறென்றும், அந்த ஆன்மா ஆணவமலத்தால் கட்டுண்டு ஜீவனாயிற் றென்றுங் கூறுகிறார்கள் கூறுவதால் பிரமமே சிவனாகவும், சிவனே ஆன்மாவாகவும் ஆன்மாவே ஜீவனாகவும் ஆகின்றன. இதனால் பிரமமென்னுஞ் சொல்லுக்கும் சிவனென்னுஞ் சொல்லுக்கும் ஆன்மாவென்னும் சொல்லுக்கும் ஜீவனென்னுஞ் சொல்லுக்கும் பொருள் ஒன்றேயாமென ஏற்படுகின்றது சித்தாந்திகள் சொல்லுகிறபடி ஆன்மா ஆணவமல சம்பந்தத்தால் ஜீவன் அல்லது பசு என்கிற பேர் பெறுகிறது. பெறுவதால் ஆன்மா வென்னுஞ்சொல்லுக்கு ஒரு பொருளும ஜீவனென்னுஞ் சொல்லுக்கு ஒரு பொருளுமாய்ப் பேதப்படுகின்றதில்லை. ஆன்மாவுக்கு ஆணவமல சம்பந்தத்தைப் பற்றியே ஜீவனென்கிற பெயர்வந்தமையால் ஆன்மா ஒன்று.ஜீவன் ஒன்று ஆக இரண்டு பொருளன்று ஒரே பொருளாம் இனிப்பிரமமான சிவன் வேறு ஆன்மா வேறு என்னின் பிரமமான சிவனும் பூரணமாம் சித்தாந்

த சைவர்கள் சொல்லுகிறபடி சிவனுக்கு வேறான ஆன்மாவும் பூரணமாம் அன்றி யிரண்டும் சத்துப்பொருள் இது எப்படிப் பொருந்தும், பொருந்தாமையால் சைவசித்தாந்திகள் செய்யும் வாதம் துர்ப்பல வாதமாமென் றறிந்திடுக.

ஆன்மசிவப்பிரமமான சச்சிதாநந்தப் பொருளைச் சிவனென்றும் பிரமமென்றும் அழைத்து அதைவேறு வைத்து, அப்பொருளுக்கு மற்றொரு பெயரான ஆன்மாவை ஷெ சிவனுக்கு வேறுபடுத்தி, அதை ஜீவான்மா வெனக்கொண்டு, அந்த ஜீவான்மாவே நானென்பதற்குப் பொருளென்கிறார்க ளாகையால், சித்தாந்த துவித சைவர்கள், ஜீவனையே கடவுளென்றும், கடவுளையே ஜீவனென்றும் சொல்லுகின்றவர்களாகி, அந்தக் கடவுளை நானென்று சொல்லுகின்றவர்களாகவு மாகின்றார்கள். இவ்வாறு சொல்வதால் துவிதிகள் பொருளைப் பொருளாகக் கொள்ளாதவர்களும் பொருளல்லவற்றைப் பொருளாகக் கொள்ளுகின்றவர்களுமான விபரீத வுணர்ச்சி யுள்ளவர்களாம் என்க.

சிவனென்றும் பிரமனென்றும் சொல்லப்படுகிற சத்துப் பொருளுக்குஆன்மா வென்றும் ஏகமென்றும்பேரிருப்பதாலும் அதற்கு வேதமுதலிய நூல்கள் பிரமாணமா யிருப்பதாலும் அந்தப்பிரமாணங்களைப்பிரமாணமென வேதாந்திகளைப்போலச் சித்தாந்திகளும் அங்கீகரிக்கக் கடமைப் பட்டிருப்பதாலும் வேதாந்திகளைப்போலச் சித்தாந்திகளும் ஏகாத்து மாவாதிகளாமென்பதிற் றடையேதுமில்லை. இங்ஙனமாக வேதாந்திகளையே கான்மவாதிகளெனச் சித்தாந்திகள் இகழ்ந்து கூறுவதென்னை இது யாங்ஙன மிருக்கின்றதெனின் ஒரு மனிதன் மற்றொரு மனிதனை நோக்கி, "மனிதனே!" எனவிகழ்ந்து கூறுவதனோடொக்குமென்க. பிரமத்தின் பரியாய நாமமாக ஆன்மாவையும் சிவனையும் வேதம்ஸ்மிருதி புராணாதிகள் கூற, அவைகளையெல்லாம் அப்பிரமாணமாக்கி, அவைகளுக்கு மாறாக, யாரோ சில அவைதிக துவித சைவ சித்தாந்திகள் துரபிமானத்தினாலும் மதமாறினதினால் நேர்ந்த துவேஷத்தினாலும் எழுதிவைக்க அப்பிரமாணநூல்களைப் பிரமாண நூல்களெனக் கொண்டு, அவைகளை அவையின்கண் எடுத்துக்காட்டுதலும் பிரசங்கித்தலும எழுதுதலும் பேசுதலும் நன்றாமோ.

ஆன்மா வென்பது சிவம் அல்லது பிரமமெனச் சதுர்த வித்தைகளும் தம்பட்டம் அடிக்கவும் அவ்வாறு வேதாந்திக சிவஸ்தானத்தில் ஆன்மாவென்னும் சொல்லைப் பிரயோகிக்கவு அந்தச் சிவனை ஆன்மாவை ஜீவான்மாவாக வேதாந்திக சொல்லுவதாய்ச் சொல்லியும், அதோடேகாத்துமவாதிகளெ இகழ்ந்தும் வருவது மதியீனமாம் அன்றிச்சிவனை ஆன்மாவை ஜீவான்மாவாகக் கொண்டு, அந்தப் பரமசிவ ஆன்மாவைவிட வேறே ஜீவனென்னும் பொருளொன் றிருப்பதாய் வெற்றுரை புகல்வது பின்னும் மதியீனமாம். இது எவ்வாறிருக்கின்ற தென் னின் வீடு என்றும் கிரகம் என்றும் பெயர்பெற்ற ஓர் பொருளை வீட்டுக்கு வேறு பொருளென்றும் கிரகத்துக்கு வேறு பொரு ளென்றும் விளம்புதற் கொப்பா யிருக்கின்ற தென்க இவர்கள் ஒரு பொருளை இருபொருள்க ளாக்கிக்கொண்டு பேசினால் அவ் வாறே அது இருபொருள்களாய்விடுமா? நூற்பிரமாணங்களுக்கு மாறுக, இவர்கள் சொல்வதை யங்கீகரித்தாலும் யுத்தி அனுபவ ங்கட்குப் பொருந்த வில்லையே.

சூரியனென்று, நீர் ஒன்று, நீரிற்பிரதி பிம்பித்த பிரதிபிம்ப சூரியனென்றுஆக முப்பொருள்களும் உவமானம். சிவனென்றும் ஆன்மாவென்றுஞ் சொல்லப்பட்ட பிரமம் ஒன்று, அவித் தையொன்று, அவித்தையிற் பிரதிபிம்பித்த ஜீவனென்று ஆக முப்பொருள்களும் உவமேயமாம். உவமானத்தில் நீர் வற்றிப் போனால் பிரதிபிம்ப சூரியன் பிம்பசூரியனைப்போய் பிம்பசூரி யனே மிஞ்சுகிறான். அவ்வாறே முத்திநிலையில் நீர்போன்ற அவி த்தியா நாசத்தில் பிரதிபிம்ப சூரியனைப்போன்ற ஜீவன்போய் பிம்பசூரியனைப்போன்ற சிவன் அல்லது பிரமம் அல்லது ஆன் மாவாய் மிஞ்சுகிறான். இது பிம்பப் பிரதிபிம்ப உவமானத்தை அனுசரித்துச் சொல்லும் அத்துவித சித்தாந்தமாம். இனித் துவித சித்தாந்திகளின் நிலைமையாவது ஜீவனை பசுவுக்குப் பசுத்தன்மை யொழிந்து ஜீவபசுவுக்குப் பொருளான பரிபூரண ஆன்மாவாகி, அதன்பேரில் பரிபூரண சிவனை பிரமத்தோடு ஒன்று பட்டிருக்கு மென்பது ஒன்று பட்டிருக்கு மென்கை யுபசாரம் இரண்டு இரண்டே என்பது அவரது மதசித்தாந்தம் இதிலுள்ள நியாயா நியாயங்களைப் புத்தி மான்கள் அறியாமற் போகார்.

(இன்னும்வரும்)

பு. ஐயராம்பிள்ளை, ஆத்மநேசன்

நடும்போது ஒரு துளையில் ஒரு செடியை நடுகிறார்கள். வளர்வதற்கு வேண்டிய இடமிருப்பதால் நாற்றிலிருந்து அனேக பக்கக்கிளைகள் உண்டாகின்றன. நெருக்கமாய் நடப்பட்ட பத்து செடிகளைப் பார்க்கிலும் அதிக கதிர்களை இக்கிளைகளெல்லாம் சேர்ந்து விடுகின்றன. ஏனென்றால் இந்த பத்துசெடிகளுக்கு வளர இடமில்லை. அவைகள் ஆகாரமின்மையால் இளைத்துப் போயின. அது எப்படியென்றால் ஒரு கால்நடைக்கு வேண்டிய பில்மேயும் நிலத்தில் அனேகமாடுகளை மேய்த்தால் அவைகள் இளைத்துவிடுவது போல பயிர்களும் இளைத்துப்போம். இதற்கு திருஷ்டாந்தமாக கோயம்பத்தூரி லிருக்கும் சர்க்கார் பண்ணையில் ஒரே நாற்று நட்டிருக்கும் செடியிலிருந்து உண்டாகும் ஐம்பது பக்கக்கிளைகள் எண்ணப்பட்டன.

தென் ஆற்காடு ஜில்லாவில் சிதம்பரத்துக்கு அருகாமையிலிருக்கும் விரசோழத்தில் ஒருபுத்தியுள்ள பயிர்க்குடியானவன் இந்த சங்கதியை தானே தெரிந்துகொண்டு ஒரு எகராவுக்கு இரண்டரை பட்டணம்படி விதைமாத்திரம் உபயோகப் படுத்தி அவனுக்கு பக்கத்தி லிருக்கிற பயிராளிகளைவிட அதிக ஜாஸ்தி கண்டு முதலை அடைகிறான்.

ஒவ்வொரு பயிராளியும் தன்னுடைய நிலத்தில் ஒரு துண்டில் இந்த விஷயத்தை தானே சோதித்துப் பார்க்கவேண்டும். நாற்றங்காலில் ஒரு மூலையில் கொஞ்சம்விதைகளை தனித்தனியாய் விதைத்து நன்றாய் எருப்போட்டு ஒருமாசத்துக்கு அதிகப்படாமல்வளரவைத்துபிறகு நாற்றை நடவேண்டும். இந்த நாற்றுகளுக்கு வளர அதிக இடமிருப்பதால் அவைகள் சிக்கிரம் வளர்ந்து ஒரு மாதத்தில் அவைகளைப் பிடுங்குவதற்கு பக்குவமாய் பெரியதாய்வளர்ந்திருக்கும். நாற்று நடும்போது பூமி வளமாயிருந்தால் ஒவ்வொரு செடியும் ஒரு சாண் தூரத்தில் நடவேண்டும். பூமி வளமாயில்லா விட்டால் அரைசாண்தூரத்தில் நடவேண்டும். கொஞ்சநாளைக்கு பூமியில் நீர் அதிக ஆழமாயிருக்கும்படி செய்யக்கூடாது முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயங்கள்வேறேகிடையாது. முதலில் செடிகள் மிகவும் எளிமையாயிருக்கும். ஆனால்இரண்டு மாதத்தில் அனேக பக்கக்கிளைகள் உண்டாகிவழக்கத்தைப்போல் நடவுநட்டதுபோல புலமுழுதும் அடர்ந்தபயிர்

களாயிருக்கும். அறுப்புகாலத்தில் இந்த செடிகள் அதிக தானியங்களை கொடுப்பதாக தெரியவரும். மேலும் தானியங்கள் சாதாரணமாய் பயிரிட்டுவரும் தானியங்களைவிட பெரிதாயும் பளுவாயுமிருக்கும்

சென்னை,
1908-ம் ஞு ஜூலை 17உ

எம். இ. கௌச்மன்
அச்ரிகல்சர் டைரெக்டர்

உழவு.

உழவு என்பது, இம்மை மறுமை வீடுபேறடைதற்குரிய மக்களுயிர்க்கு அப்பெறுங் கருவியாகிய வுடம்பு நிலைபெறச் செய்யுஞ் சிறப்பிற்றுப வுண்டிவினைக்கின்றியமையாத விளையுளைத் தரும் அருந்தொழில். அது உழுது பயிர்செய்தலாம். இதனை உழுதலென்னாது, உழவென்றதென்னை? யெனின், ஏர் உழுதல் பரம்படித்தல், நிலந்திருத்தல், புழுதியாக்கல், சேடைசெய்தல், விதைவிதைத்தல், நாறு நடுதல், நீர் பாய்ச்சல் களைகட்டல், ஓம்புதல், விளைவறுத்தல், போர்வேய்தல், பிணையடித்தல், சேர்த்தல், பாத்தல் என்றபல தொழில்களையுந் தனக்குறுப்பாகக்கொண்டு, அவ்வத்தொழில்வருத்தங்க ளெல்லாம் விளங்கக்குறித்துப் பொதுமையினிற்றலின், தொல்லையோர் அங்ஙனங்கூறிவழங்கிய வாறென்க. எனவே, உழவு-வருந்தி முயறல். இதுவே அச்சொற்குப் பொருளென்பதனை "உழந்து முழவேதலை" என்புழிப்பரிமேலழகருரைத்த வுரையானு முணர்க.

இத்தொழில், இறைவனருட் டொழிலைந் தொழியவேனைத் தொழிலெல்லாவற்றினுள்ளுந் தலைமையதென்பதனை, "சுழன்று மேர்ப்பின்ன துலக மதனா, லுழந்து முழவேதலை" என்று தேவர் மொழியானு முணர்க.

அற்றேல், புலனடக்கல் தலைமையதன்றோ? தேவரும், "செயற்கரிய செய்வார் பெரியர்" என்றனரே யெனின், அற்றன்று; அவர் புலனடக்கலை அரிதென்றது, இருவினை யொப்பு மலபரிபாகமுற்ற நுண்ணறி வாளர்க்குத் திருவருட்டுணையாலினிது முடிவதன்றி, ஏனையர்க்கு அரிதென்பது குறித்தற்கன்றோ ஆண்

டே "சிறியர் செயற்கரிய செய்கலாதார்." என்றதென்க. அல்லதூஉம், அப்புலனடக் கற்றொழிலும் கருவிகரணங்களுக்குழைப் பினைத் தரற்பாலதன்று. பரிபாகமுண்டாயின் றிருவருட் டுணையாலஃதெளிது கையுறற் பாலதன்றி வருத்தமுயற்றிற்று மன்று என்பதனை,

அஞ்சுமடக் கடக்கென்ப ரறிவிலா
ரஞ்சுமடக் குமமரரு மங்கில்லை
அஞ்சுமடக் கிலசேதன மாமென்றிட்
டஞ்சுமடக் காவறிவறிந் தேனே.

என்ற திருமந்திரத்தா னுணர்க.

ஆயினிஃது சாதாரணமன்றி ஏகதேசத்ததாமாகலினங் ஙனங் கூறியவாறென்பாரு முளராலோ வெனின், அவ்வேகதேசத் தும் முயல்வார் தம்மட்டன்றியேனையர்க்கப்பயன் புசிவாமாறின் மையின் அத்துணைச்சிறப்பிற்றுமன்று என்பதனை "அருச்சனை வயலுளன்பு வித்திட்டுத், தொண்ட வுழவராரத்தந்த, வண்டத் தரும் பெறன் மேகன்வாழ்க" என்ற திருவாசக வருளுப்பாட் டின் றிருவுளத் தானறிக. இன்னு மாண்டுருவகித்த வகைமை யானு மதுவாதல் காண்க.

அல்லதூஉம், தானந்தவமுயற்சி யெல்லாம் பசிவந்திடப் பறந்து போமாகவே, தேவரும், "ஆற்றுவாராற்றல் பசியாற்ற லப்பசியை, மாற்றுவா ராற்றலின்பின்" என்றதுணையானமையா து, பசிமாற்றுவாராவாரிவ ரென்வதூஉங் குறித்தற்கே போலும். "உழவினார் கைம்மடங்கினில்லை விழைவதூஉம், விட்டேமென் பார்க்குநிலை" என மீட்டுங் கூறினார். இஃதருத்த வாதமென் றொழிபார்க்கங்ஙன மடங்காமையு மவ்வதிகார வகலத்தானுய்த் துணர்க வென்க.

இங்ஙனந்தவத்தினுந் தலைமை சான்றதேல், வேறுதவமுயல வேண்டாவோ வெனின், இம்மையிற் "பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந், தீப்பிணி தீண்டலரிது" என்றதனானும், அம்மை யின் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந், தெய் வத்துள் வைக்கப்படும்" என்றதனானும், வீடுபேற்றிற்கு மிதுநி மித்தமாதல் "புத்தேளுலகத்து மீண்டும்பெறலரிதே, யொப்புரவி

னல்லபிற" என்றதனானுமுணர்க. என்னை? "பார்த்துண்ணுதலும், வையத்து வாழ்வாங்குவாழ்தலும்" 'ஒப்புரவு' செய்தலும் உழவினார்க்கன்றி, யேனையர்க்கு முற்றுமியலாமை யென்பது வெள்ளிடை மலையென்க. அன்றி, "இறவாரிரப்பார்க் கொன்றீவார் கரவாவது கைசெய்தூண்மாலையவர், என்றதனானு முணர்க. இக்கருத்து திருநாகந்தை யாருரை யானுமுணர்க.' பண்ணியபயிரிற் புண்ணியந்தெரிரிம் என அம்மை கூறியது மிதுவிளக்கவென்றுணர்க.

அங்ஙனமாக, மனுமுதலிய மிருதி நூலுடையார் கொழுநதியினூறுபாடு முதலிய பத்துவகையாற் சீவக்கொலைநேர்தலானும் முற்றும் பிறர் துணையானன்றி யினிது முடியாமை யானும் அந்தணர்முதலிய விருபிறப்பினர்க்கு இயற்றலாகாத் தொழிலென விதனை மறுத்தவாறென்னை யெனின் நன்று வினாயினாய் உழவில்லையேல் வேதியர் உஞ்ச விருத்தி சில விருத்தியும்புரிந்து பகுத்துண்டு பல்லுயி ரோம்பலும், அரையர் பொருளீட்டி யுலகோம்பலும் ஏனையர் ஏனைய வினையுஞற்றலும் யாண்டையதென்க. அல்லதூஉம், மறையவர்க்கு இல்லறதருமத்துட்டீ யோம்பலுண்மையா னில்லம் விளக்கன்மெழுகல் விறகெரித்தலாதியானும், அரையர்பகை விலங்காதி யானுறுமூறு களைதலானும், உலகோம்பலிற் றண்டைத்தானும் உறும் சீவக்கொலைக் கென்செய்கவென்றபடி. இவ்விருவகையார் தொழிலும் பிறர் துணையின்றியே நிகழற்பாலனவோ ஆகலின், அவர் தங்கருத்து அவ்விருவகையாரையும் அவர்க்கு விதித்த தொழிலின்க ணூக்கஞ்செல்லுமாறு மறுத்தவாறென்று கொள்க. ஆகலிற்றுனிருபிறப்பாளருளொருவராய வசியர்க் கஃதுரிமைத் தொழிலென அம்மிருதியே கூறிற்று. இன்னுமம்மிருதி சூச்சிறு கொலைப்பாவ நீங்கவென்றே ஐம்பெரும் வேள்விநாடொறும்புரிகவென விதித்தவாறென்றுணர்க. அல்லதூஉம் தொழின்மயங்காமைகாரணமுமாமெனவு முணர்க அதிகாரி சம்பந்தம் விடயம் பயன்வகுத்த படியுமாம். இல்லையேல், தொழில்வரம்பின்றி, உலகியல்நிலையிலாதொருவர் மேற்கொள்வழிப், பழக்கமின்மை யாலினிது முடியாமை பேரிழவாகியுமுளவாமென்பதூஉமென்க. அன்றியும், ஒன்றேமிகுத்து ஏனையவருகிய வழியும் முழுப்பய னில்லையாமாறு முணர்க. இக்கருத்தே பற்றி அம்மிருதி அப்பார்க்கு ஆபற்காலத்துழவுத் தொழிலாமெ

ன்றபடி யென்க. இதனை மகா கவியாய கம்பர் கூற்றானும், அக்கூற்றுக்ககலமுரைத்த திருநாகக் கையாருரையானுமுணர்க. எல்லா நூலாசிரியர்க்கு மிஃதொப்ப முடிந்தவாறென்ப தவ்வந்நூலானு முரைகளானு முணர்க. இக்காலத்தும், வினை வரம்பிகந்தமை காரணத்தாற் சில தொழிற்றிறஞ் சீர்பெருமையும், பலர் முற்றாட்டு வாழ்க்கை முட்டுற்றமையுங் கண் கூடாகக் காணுமது காண்க.

விகட வினோத விஜய வியாஸம்.

சியம் தேசத்தைச் சார்ந்த பிச்கிற் என்னுமிடம்தில் ஒரு வெள்ளை யானை கண்டுபிடிக்கப்பட்டது. இந்த சமாச்சாரங்கேட்ட மகாபுராண மகிபர்களெல்லாம் வெள்ளை யானையாயிருக்கும் போது தேவேந்திரனுமிருக்க வேண்டுமெல்லவா அப்போது தானே'யானை நமதுபுராணம்சொல்லுவது சரியாயிருக்கும், என தேவேந்திரனைத்தேடுவதற்கு புறப்பட்டு விட்டார்களாம் போன. இவர்கள் வரக்காணாது 7பெலூன் ஆகாயக்கப்பல்கள் சென்றிருக்கிறதாம்.

கொளம்பு பகுதியில் ஓர் பெண்பிள்ளைt தண்ணீரில்குளித்துக்கொண்டிருக்கும்போது ஓர்முதலை கடித்திழுத்து தண்ணீருக்குள் போய்விட்டதைக்கேட்ட ஜனங்கள் திரண்டுபார்க்கையில் ஓர் பௌராணிகர் ஸ்ரீசுந்தரமூர்த்தி ஸ்வாமிகளிருந்தாலும் ஓர் பாசுரத்தினால் அழைப்பாரே இக்காலத்தில் செய்தால் மெத்த அற்புதமல்லவா என விசனித்திருக்கும் காலத்தில் ஆசாமியாகிய தேசிகசாமிகளை அழைத்தார்களாம்.

சிலவவகையான ஆசாமிகள் உற்சவத்திற்கும்வருகிறது, யோலகடந்தவருடம் திருமயிலை அறுபத்துமூவருற்சவத்திற்கும் வந்து நடந்த ஏதோ அதிகாரிகள் வார்த்தையால் இனி இந்த உற்சவத்திற்கு வருவதேயில்லை. மாடவீதியிலும் கால்வைப்பதில்லை யென்றுசொல்லிப்போய் விட்டாராம். அடுத்த உற்சவத்திற்றுள்ளாக அதையும்மறந்து பழைய ஆசையை நாடி திரும்ப இந்தவருட அறுபத்துமூவருற்சவத்திற்கும் வந்ததை யறிந்த விகடவியாசன் இரண்டுபக்கமும் சப்திக்கச் சிரித்தானும்.

தேககசுகம்.

உலகதோற்றத்துள் சிரேஷ்டம் பொருந்திய மானுஷீகம் வந்தபோது துன்பம் இன்பம் என்னும் தொடர்பும் தொடர்ந்து நிற்கும்எவ்வகைத்தான விஷயங்களினால் எத்தகைய துன்பங்களி

ருந்தாலும் தேகசுகத்துக்குத் துன்டம்தேடிக்கொள்ளா திருத்த லே அதிமுக்கியமானது. எவ்வகைப்பட்டநல்லறங்களுக்கும், நல் வழியிற்றேடும் பொருள்களுக்கும் திரிகரணங்களால் அடையும் நல்லின்பங்களுக்கும் ஞானனந்த ருகிய வேறு ஜனன மில்லாமல் யாவுந்தானுய்த் தோன்றித் தனக்கும் ஈஸ்வரனுக்கும் உலகத் திற்கும் வேறுபாடின்றி நிற்கும் மோக்ஷமாகிய வீட்டிற்கும் ஹேதுவா யிருப்பது தேகமேயாம். ஆதலிஞல் அவ்வகைத்தான சரீரத்திற்கு நோய் சேராவண்ணம் நன்கு சுகத்தோடிருக்க காப் பது யாவருக்கும் அவசியம் தான் என்பது கொண்டு தேகசுகம் என்னும் தலைப்பின்கீழ் சிலது வரைவாம். வைகறைத் துயி லெழு என மூதாட்டியார் சொன்னசொல்லைக் கடைபிடித்து அதிகாலை யி லெழுந்தால் கூரிய புத்தியும் நரம்புத் தாரைகளுக்குச் சுத்தி யும் வாதபித்தங்கள் தக்கநிலையையும் பொருந்தும். அச்சுகமெனி லோ அதிகாலையி லெழுந்து முகம் கண்களைக் கழுவி மலங்கழிக் கப் போகவேண்டியது. பின்னர் தந்தசுத்தி முதலியன செய்து நீராட வேண்டியது. பல்கொம்புகொண்டு விளக்குவது ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்பது கொண்டு புராதன பழக்கத்தனு சரிப்பாயினும், பழையன கழிதலும், புதியனபுகுதலும் என்னும் சூத்திரப்படி அதை நிறுத்தி சரியான பாகமுடைத்த பற்பொடி கொண்டு விளக்குவதே தேகசுகத்திற்குச் சித்தியாம்.

நமது உறுப்புகளின் வேண்டு கோளுக்கு விரோதமாய்நடக் கக் கூடாது. அதாவது, தேகதத்துவத்தை எதிர்க்காமல் நடந் தால் தேகசுகம் கெடாது. அதாவது, சரியாக ஓடிக்கொண்டிருக் கும் நரம்புகளின்ரத்த ஓட்டத்தைக் கெடுக்கிறது மயக்கத்தை யுண்டுபண்ணும் எந்தவித லாகிரிவஸ்துக்களை யுண்ணுவதும், கடுவழி நடப்பதும், பசிவந்தக்கால் வேளையறிந்து சரியாக உண் ணுயல் (துட்டுசேர்க்க விரும்பி 12-மணிக்குப் பல்துலக்கி 1-மணி க்குப் பழையது சாப்பிட்டு) மத்தியான சாப்பாட்டைத்தவிர்த்து இராத்திரி போஜனம் செய்யும் துற்பழக்கம் இருப்பதும், முஷ்டி மைதுனம், பகற்புணர்ச்சி, முதிர்ந்தாள்புணர்ச்சி, அதிகபுணர்ச்சி முதலியனசெய்வதும் தேகதத்துவத்துக்குவிரோதமாகச்செய்த லென்பார்கள் பெரியோர். அவ்வாறு நடத்திஞல் தேகசுகம் கெடு மென்பதுதான் கருத்து. அவ்வாறே இந்து தேசம் உஷ்ணபூமி யானதால் கௌரதைக்காக ஆவது அணிந்து கொள்ளுக்கப்படுகி

உடுப்புகள் போடாது பருத்தி ஆடையை நம்மவர்க ளணிந்தால் தேகத்திற்குச் சுகமாம். ஆயினும் இதனால் கம்பளி யுடுப்பு கூடாது என்றுதவிர்ப்ப தல்ல நமதுகருத்து. ஏதோசீதளகாலந்தில் தேகத்தில் பருத்தியாடை யுடுத்து அதன் மீதுகம் பளிபோட்டுக் கொள்வதுதான் தேகசுகம்.

தேகத்தை சுத்தமாக வைப்பதும் சுத்தமான ஆடைதரிப்பதும் அதிமுக்கிய தேகசுகம். தேக அழுக்குடன் கலந்தழுக்குச் சட்டை முதலியன வுடுப்பார்களாயின் அதிலிருந்து சிறுபூச்சுகள் உற்பத்தியாகி தேகசுகத்தைக் கெடுக்கும் படுக்கை பூமிமட்டத்திற்கு மேல்குறைந்தது 2-அடி உயரமாக மரப்பலகை யிட்டாவது படுத்தல் தேக சுகத்தைக் கொடுக்கும். அப்போதும் வாரத்திலொருமுறையாவது படுக்கையை சூரியபுடம் வைக்க வேண்டும் அதனுலும் மனோமுயற்சி செய்வதுபோல் தேகமுயற்சிசெய்வதினுல் தேகத்திற்கு சுகமுண்டாகும்.

அதாவது:— 6—மணிநேரம் மனோமுயற்சியும் 2-மணி நேரம் தேகமுயற்சியும் செயவதே தேகசுகம் அவ்வாறு செய்வது நடத்தல், ஓடல், நீந்துதல், சவாரிசெய்தல், பாரந்தூக்குதல் முதலியனவாம். ஏஷைகளுக்கு இச்சரீரப் பியாசம் இருந்தபடியே இயற்கையி லுள்ளதால் பள்ளிக்கூட மாணுக்கரும், பிரபுக்களா யிருந்து யாதும் நஷ்டமின்றி கூப்பிட்டு காலங்கழிப்பாருங் கவனிக்க வேண்டியதேயாம். நமது தேகத்தி லுள்ள தோலின் துவாரங்களில் நீர் சுவரின் காற்று அடையாமல், மாரிகாலத்தில் தேகபோர்வையுடன்காலையில் சுத்தமான காற்று உண்டான இடத்தில் நடந்தால் தேகசுகமுண்டாகும்.

சற்றுசுகஜீவி யாயுள்ளமனிதன் இரவு 10-மணிமுதல் 5மணி வரையில் 7-மணிதூக்கம்தூங்குவதினுல் தேகசுகமுண்டு. 9-மணி முதல் 5-மணி வரையிலும் சற்றுதளர்ந்தவர்கள் தூங்குவதினுல் தேகசுகம் (இது அனுபவம்) இரவில் வீண்காலப் போக்காக நாடகம், பாட்டுகச்சேரி முதலிய விவகாரங்களில்விடியவிடியங்கண் விழிப்பதைத் தவிர்த்தால் தேகசுகம். சில வீண்காதப்ரசங்க பிரசங்கிகள் மாரிகாலத்து தவளையன்ன பல்லோருடைய அனுபவத்திற்கும் சுருதிக்கும் சற்றேனும் பொருந்தாத ராகதாளங்களால்

சூரிய உதயாதி மட்டும், வெண்பல் காட்டி உடம்பு குலுக்கி கைத்தாளமிட்டு பாடிச்செய்யும் பிரசங்கங்களால் தேகசுகங் கெடும். (இத்தகைய கட்டுக்கதை பிரசங்கங்களை எத்தனை இராத்திரி விழித்துக் கேட்டாலும் மோக்ஷமடைவதில்லை.) பகல்தூக்கம் தேகசுகத்தைக் கெடுக்குமாதலால் வேனிற் காலத்தில் சிறிது தூங்கலாம். மாரிகாலத்தும் வசந்தகாலத்தும் கிஞ்சித்தும் பகல் நித்திரை கூடாது.

நமது இந்துதேசம் உஷ்ணதேச மாகையால் சிறுபருவத்தே சிற்றின்ப அகர்ச்சி யுண்டாய் விடுகிறதியல்பென்றும் ஆண் பிள்ளைகளுக்கு 13-ம் வயதில் உற்பத்தியாய் 16-வயதுக்கு மேல் பக்குவமாக சுக்ல சேர்க்கை யுண்டாகிறது. மானிட கூட்டம் கெட்டுப் போகாதபடி பெரியவர்கள் விவாகம் என்னும் வழக்கம் வைத்தாலும் அதற்குமுன்பாகவே சிறுவயதிலேயே நமது சிறுவர்கள் உலக இன்பத்தில் அழுந்துவதினால் தேகசுகம் கெடும். அப்படியெனில் 16-வயதிற்குள் சிற்றின்பத்தில் மூழ்குவதால் மூளைசுண்டி ஆலோசிக்கும் தன்மை கெடும். தேகபலம் சிதைவு படுகிறது. குலையில் வியாதியுண்டாகிறது. மலச்சிக்கல்அதிசாரம் காணுமென வைதிய சாஸ்திரிகள் கூறுகிறார்கள். இது அனுபவத் துண்மையேயாம். அதுவுமன்றி மரணத்துக் கருகான பெரிய வியாதிகள் சேரும். 20—வயதுமட்டும் படித்து 10-வயதுள்ள பெண்ணை மணந்தால் அதன்பிறகு 14 அல்லது 15—ல் இருவரும் இல்லற நடத்த தேகசுக முண்டாகும். அவர்கள் பயின்ற குழந்தைகளும் நெடுநாள் சுகத்தோ டிருக்கும். பூப்பூ காலங்களில் இல்வாழ்க்கை விரும்புவதினால் தேகசுகம் கெடும். காலைமாலையிலும் உண்ட உடனும களைத்திருக்கும் போதும், வியாதியா யிருக்கும் காலத்தும் சேராதிருந்தால் தேகசுகமாம். சுகமும், பலமும், உள்ளவர்கள் வாரத்திற் கொருமுறை சேர்வதால் தேகசுகமும், பலங்குறைந்தவர்கள் 15-நாளுக் கொருமுறை சேர்வதால் தேகசுகமும், மாதத்திற் கொருமுறையானல் மிகுதியாக தேகசுகமும் யௌவனத்தே செல்வாக்குடன் போஷிக்கப் பட்டவர்கள் திடகாத்திர தேகிகள் வாரத்திருமுறை சுகமனுபவித்தால்தான் தேக சுமுகம் எனப்பெரியார்கூறுகின்றனர். பின்னும் மேற்கூறியவிஷயங்களைத் தக்கதெனக் கொள்ளு மிடத்தும், ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, மாதங்களில் பட்சத்திற்கொருமுறையும், இன்பநுகர்

வது தேகசுகமென்றும் கூறியுள்ளார் பெரியார். ஆகலின் இவைகளை அவர்கள் சுருதிகொண்டும் தத்தம் அனுபவங் கொண்டும் நடப்பதே தேகசுகமாம். மேற்கூறியவைகளுக் கிடையூறாக எக்காரியங்கள் செய்தாலும் கடியாரத்திற் பூட்டியிருக்கும்சாமான்களால் கடியாரம் நடப்பது போன்று பலவித தத்துவங்கள் பூட்டியுள்ளதால் நடக்கும் உயிரானது தத்துவக் கெடுதியால்கெட்டு தேக சுகத்தாழ்வுற மரணம் துரிதம் வருவதென்பதே யாம். தேகசுகத்துக் கதீதமாகிய மோக்ஷம வேறில்லை. யென்பதால் நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம் என்றும் சொல்லப் படுகிறது.

கடிதங்கள்.

சென்னை பறையர் மகாஜன சபை.

இச்சபையும் இதன்பேராலாய ஓர்பத்திரிகையும் நீண்டநாளை முன்னர் மலைமேலேற்றிய தீபம்போல் தோன்றிநடந்து வந்தது. இக்குலத்துக்கு அநுகூலங்க ளதிகமாய்ப் புகட்டி நின்றது. அவ்வளவு நன்னிலைக்கும் முதலீடுபட்டு தன்னயங்கருதி யுலகத்தாரை வஞ்சித்துப் பொருள் பறிக்கும் ஆசாமிகளைப் போலல்லாது, சுஜாதியபிமானம் பரோபகார சிந்தையும் குலநல விருத்தியும் கல்விமேம்பாடுங் கொண்டுழைத்த பிரபன்னர் ஸ்ரீ இரட்டைமலை ஸ்ரீநிவாசம் பிள்ளையவர்களேயாம். இவர் உழைப்பும் பொருத்தமும் அநேகருக்குநல்லதாகக் காணப்பட்டது. தீமையாகக் காணப்பட்டது சிலருக்கு. எது எவ்விதமாயினு அவர் எடுத்த முயற்சி அவ்வளவும் குலநலங் கொண்டதேயாம். இதற்குஅப்பிரபன்னரால் நடந்த அநுகூலங்களே போந்த சாக்ஷியாம். அதுவே கல்லின்மே லெழுத்தாயிருக்க யாம் அதிகமெழுதுவானேன். கருணை தங்கிய ஆங்கிலஅரசாக்ஷியில் குலநலம் பாராட்டி பொய்க்குல வாய்ச்சொல்லிகளைக் கண்டித்துமிக்கா றுகூல ஞூரியனாக நின்றவர் அவரேயாம். அவ்வரிய செயலுடைய வருக்குந் தீங்கிழைக்க வுன்னி பறையருக்கு வழக்கமில்லாதவோர் பெயரைப்பூட்டி ஒருவாறு பொருந்தக்காட்டி வீண்குதர்க்கம் புரிந்து தீங்குசெய்தார்கள். (இதுவே கோடரியும் அதன்காம்புமாம்) அதன்பின்னர் அச்சபையும் பத்திரிகையும் மறைவுபட்டுத் திரும்பவுயர்த்து வளர ஆரம்பித்தது என்பது கேட்டு யாங்கொண்ட சந்தோஷம் அளவில்லை. அவ்வாறே 1909-ஞ மார்கழி 12உ சனிக்கிழமை மாலை 4 மணிக்குச் சென்னைத் தேனாம் பேட்டையின்கண் கனம் P. பொன்னுசாமி பிள்ளை யென்பவர் வீட்டில் கூடியதாகவும் அக்காலத்து பாரியண்டுகம்பனி மானேஜர் கனம் V. A

சின்னசாமிப் பிள்ளையவர்கள் சபாநாயகராக விருந்தா ரென்றும் T. R.
பொன்னுசாமி பிள்ளை ஜே, கதிர்வேலு பிள்ளை ஜே; இரத்தினம் பிள்ளை,
வி, தம்புசாமி பிள்ளை L, M; திருவாய்மொழிபிள்ளை M, P, பொன்னுசாமி
பிள்ளை V. D, பெஞ்ஜமன் முதலிய கனவான்கள் வந்திருந்தார்க ளென்
றும், டெமியோ கவர்ன்மெண்ட் பிரஸ் செக்ஷன் ஒல்டர்கனம L, R. வடி
வேல் பிள்ளை பெங்களூர் மற்றும்பல விடங்களிலிருந்து சபைக்கு அனுப்
பிய கடிதங்களும் மற்றும் ஆங்காங்கிருந்து வந்த கடிதங்களுடன் பிரதி
நிதியும் காரிய தரிசியுமாகிய வை. குலாபிமானப் பிள்ளையவர்கள் தென்
னாப்பிரிக்காவி லிருந்து எழுதிய கடிதங்களும் வாசித்துக்காண்பிக்கப்பட்ட
தென்றும் பூர்வத்தமிழின் சபையின் மூப்பர் கனம் தி. மாணிபல்அவர்கள்
முதலாக மற்றும் சென்னை ஓ, க, கைத்தொழில் சாலைமூப்பர் கனம் R கரி
கிருஷ்ணப் பிள்ளை யவர்கள அனுகுசம்பந்தங் காட்டும் சில ஏற்பாடுகளு
ம் நிறைவேறிய தென்றும் நமக்கனுப்பிய பத்திரிகை வாயிலாகத் தெரிந்து
சந்தோஷிக்கின்றனம், அவ்வச்சுப்பத்திரிகை செல்லெரித்த பதிப்பு பத்தி
ரிகையா யிருந்தாலும் நார்னோக்காது பூவை அரவணைத்ததெனக் கொண்
டாம் இக்காரியம் நமது சுஜாதியபி மானசீர்திருத்த எற்றத்துக்கு மெத்த
அநுகூலமே இதன்படி யங்கீகரித்து சந்தோஷியாதவரு முண்டோஇல்லை
ஆயினும், தன்னயங்கருதி பிறரைக்கெடுக்கும் சண்டாளரும்,
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி, கல்வி யருமையையும்
கற்றுணர்ந்தார் தாரதம்மியமு முணராது நயவஞ்சகத்தைத் திற
ப்படுத்தி தன்னை பொறுமையும் அடக்கமும் உடையவர் போல்
பேசி, ஒளிக்கு ஒளி செய்து வைப்பதுபோல் நடித்துக் காட்டிப்
பொறாமை இத்தகைத்து என்றும் எந்தசமயத்தில் அதையும்
கைப்பற்றவேண்டு மென்று முணர்ந்தார்க்கும் உரைத்து தன்
எண்ணத்தை கபடயாக நடத்திக்காட்டும் கீழ்மக்களும். ஜாதிக்
கேற்ற புத்தி குதிரைக்கேற்ற லத்தி என்பதுபோல் தங்குலத்
தனமையான குணத்தால் மிலேச்சத் தனமாகப் பேசும் வீண்ட
கார்களும், தம்மக பின்னதென் றுணராது சபையினிடத்துப்
பிறமதத்தைத் தூஷித்துப் பிதற்றும் மதப்பேய் பிடித்தமதோன்
மத்தர்களும் இனத்தையே கெடுக்கும் ஈனக்குணத்தவரும், சிறு
படிப்பால் தனக்குயாரும் இச்சாதியில் நிகரில்லை யென எண்ணி
எனையோரைப் பரிகசிக்கும் பாஷாண்டிகளும் சேராது ஒற்று
மை குலாபிமான முதலிய வற்றைப்பூடணமாகக்கொண்ட புண்ய
சீலர்கள் சேர்ந்துகவனித்து நடத்துவார்களாக. நமது அன்புள்ள
இ. ஸ்ரீ. பிள்ளையவர்களும் துரிதமாக சென்னைவந்து சேரவும்
இம்மகாசபை நீடு நிலைக்கவும், சேர்ந்துழைக்கும் யாவரும்சகத்

தோடிருக்கவும், கருணையங்கடவுள் துணைபுரி வாராக. நாம் உன்னன்போ டெழுதிய வியாசத்தினால் வரும் தூஷணையும் ஒன்றே பூஷணையும் நன்றே.

உண்மைஞானப்பறையன்.

மரண அறிக்கை.

நாளது 1909ஆம் மார்ச்சுமீ 6உக்குச் சரியான திராவிடம் கீலகஆம் மாசிமீ 23உ சனிவாரம்காலை 10½ மணிக்கு, சென்னை திருப்போரூர் மாசிகிருத்திகை அன்னதானக் கையொப்ப நேயரும், இரங்கூன் ஸ்காட் (SCOTT.) கம்பெனி இலிகிதருமென்னன்பிற் சிறந்த மித்திரருமாகிய ஸ்ரீமத்: சு. எ. தருமராஜ் அவர்கள் மனைவியா ராகிய ஸ்ரீமதி: பூபதியம்மை தமது இருபதாவது வயதில் தம் இருபெண் மக்களையும் தந்தையரையும், கண்கலங்க விட்டுச் சிவபிரான் றிருநிழலை யடைய மறுநாள் காலையில் காமாயுட் மயானத்தில க்ஷேமிக்கப் பட்டது.

இப்படிக்கு,
பி. வீ. இராமதாஸப் புலவர்.
இரங்கூன்.

சமாசாரக் கொத்து.

இரங்கூன் A. B. M. பிரஸ்பிரதமடைப்பிப்பரும் ஷெயூர் இராயபஹதூர் ஸ்ரீமந் பெ. மா. மதுரைப்பிள்ளையவர்கள் அத்தியந்த ஸ்நேகரும், வித்யாபிமானருமாகிய ஸ்ரீமந். E. L. சுந்தரசாமிமுதலியாரவர்கள் மார்ச்சுமீ 26உ இரங்கோனைவிட்டுத்தமது குடும்ப சமேதராய் 30உ காலை சென்னைத்துறைமுகம் வந்துசேர ஷெ மிஷன்பிரஸ் குகாப்பு பிப்பரும், ஷெ முதலியாரவர்களன்பிற்குரியவருமாகிய ஸ்ரீமந். R. இராகுவேலுபிள்ளையவர்கள் விரும்பிய வண்ணம், தசாவதானம் ஸ்ரீமந் பூஞ்சோலை முத்துவீர நாவலரவர்களால் வரவேற்புப் பத்திரம் வாசித் தாங்கேற்றப் பட்டது.

சிலந்தி பூச்சி வலை.—முக்காற்பலம் நிறையுள்ள ஒருசிலந்தி பூச்சியின் வலையைப் பிரித்தால் 360 மைல் நீளமிருக்கு மெனக் கணக்கிடப் படுகிறது.

இந்திய சேனாதிபதி லார்ட்கிச்சினர் அவர்கள் வருகிற ஆகஸ்டு அல்லது செப்டம்பர் மாதத்தில் உத்தியோகம் விட்டு ஐரோப்பாவுக்குச் செல்லுகையில் சீனா ஜப்பான் ஆகிய இவ்விடங்களைச் சந்திக்கப் போவதாகத் தெரிகிறது.

பத்து மாசத்தில் ஐந்து பிள்ளைகள்,—மெவ்ஸினர்க்வ்ஸறன் என்பவரின் பாரியாள் இங்கிலாந்தின் தென்லம்பேத் என்னுமிடத்திலே சிலநாட்களின் முன் கருப்பவதியா யிருந்து ஒரே முறையில் ஐந்துபிள்ளைகளைப் பெற்றனளாம். அதற்காக அத்தேச வரசர் நனன் அலென் எட்வேட்ஸ் என்பவர் மூலமாய் அந்த அம்மாளுக்கு ஒரு தொகைப்பணம் நன்கொடையாய் அனுப்பியிருக்கிறார்.

இந்தசஞ்சிகையின் முதல்பக்கத்தி லிருந்து 16–பக்கமட்டும் 61–வது பக்கம் முதலாகக் கோள்ளவும்.

நமது பத்திரிகையின் ஆதரணைக்கர்த்தரு ளொருவ ராகிய ஸ்ரீமந் மதுரகவிப் புலவர் அவர்கள் சென்னை விஜயமானதைப் பற்றி வெளிவரும் சென்னை விஜயத்திரட்டில் காணலாம். அப்புத்தகம் தேவையான ஏனையோர் 2-அணா ஸ்டாம்பு தபால்கட்டணமாக அனுப்பினால் அனுப்பப்படும்.

பணத்தால் வந்தபாழ்.

இது ஒரு இனிமையான செந்தமிழ்க்கதை.

நாமேசிறப்பித் தெழுதுவது அனுவசியம்.

விலை 8-அணா. வி. பி. யுடன் 10 அணா.

வேண்டுவோர்,

பத்திராதிபர்

மஹா விகடதூதன், சென்னை

என்றெழுதி பெற்றுக்கொள்ளவும்.